preferences. Handloom industries need to know the market segmentation to realize the target market for each product. The entire product has to market under specific logo and brand name. It will lead the industries in positive approach. Entrepreneur has to try to introduce the modern technology on their process to make better and law cost in output.

Price is vital factor to run the firm that only factors to be giving income to the sectors. So handloom industries have to consider whole cost of production. When determine the pricefor the product should be aware the income of the specific target group. Producerscanmake separate pricing strategies for each product. Pricing strategies have to attract the customer. Product price has to cover the whole sellers and retailers.

Congenial working environment be ensured for employees. Place has to be easy access for customers and raw materials. Display center has to make attractive to the customer.

Industries must involve in research activities to aware the market position and to identify the target segments and analyze the marketing environment. Employee retention plan be established considering their different talent and advertisement as well as promotional activities be developed. Training be provided to employees to enhance their skill towards the production. Hand loom industries have to attract the new investors in this field to develop the industries as well as get assistance from the government toreduce the vulnerability in this field.

## 10. REFERENCES


DAILY NEWS. (2006) Muslim Aid Celebrate Achievements of Woman Entrepreneurs. pp. 7

DIVISIONAL SECRETARIAT (2015) Annual Statistical Report, Dvisional Secretariat, Kalmunai.

EXPORT DEVELOPMENT BOARD. (2013) Industry Capability Report, Sri Lankan Handloom Sector. Available from: http:// www.**srilanka**business.com/pdf/incapreport**handloom**.pdf. [Accesssed: 17th January 2016]

LAVIT, T. (1981) Marketing Intangible Products & Product Tangible. Harvard Business Review. Vol.59.p. 95 – 105.

PHILIP KOTLER. (2011) Marketing Management. Prentice Hall

SUNDAY OBSERVER. (2003) The Moor Weavers of Maruthamunai. pp. 19.


# THE INFLUENCE OF UNIVERSITY ENVIRONMENT AND LEARNING MANAGEMENT IN THE LEARNING PROCESS OF THE UNIVERSITY STUDENTS


**M.Y.Minnathul Suheera[1],M.I.F.Nuzla[2], M.F.Fazmila[3] , A.P.P.Aroosiya[4]**

[1,2,3,4]DepartmentofArabicLanguages

SouthEsaternUniversityofSriLanka

*suheesafeek@gmail.com*



**ABSTRACT**: The government has implemented various policies to enhance the modern learning process of the university students. Particularly, the government provides technological devices and let the s use of free links in terms of promoting modern learning

among university students. On the other hand, in the recent years, the progression level of the students has been observed to be in a very low condition. While the social scientific results have proven that the family and the economic status are still the primary influential tools of the students learning process, beyond all these, we are in need of exploring the influence of the university environment on the learning level of the student. Centralizing this aim, this paper attempts to identify how the social context and time management influence the learning process. The qualitative and quantitative methodologies are used for this research. The primary data has been collected through questionnaire, interview and observation of the students of Faculty of Islamic studies and Arabic Language of South Eastern University. The finding of this research is that, a huge gap exists among the students' reclamation of learning and the time management. Students spend more time for social media higher than lfor studies. In future; this progress will promote better time management and the social media.

**Keywords:** University, Student, Environment, Time Management, Academic Performance.

**அறிமுகம் :**

இலங்கையில் பல்கலைக்கழகங்கள் மாணவர்களின் உயர்கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதில் பிரதான பங்கெடுத்து வருகின்றது. இலங்கையில் முதன் முதலில் 1942 ம் ஆண்டு பல்கலைக்கழகக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று சுமார் 15 பல்கலைக்கழகங்கள் மாணவர்களுடைய கல்வித் தேவையை பூர்த்தி செய்யச் செயற்பட்டு வருகின்றன. அந்தவகையில் இன்று பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் பல்வேறு துறைகளில் கற்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். வருடா வருடம் 25,000 (60.91%) மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகி 94 கற்கைசார் துறைகளில் கற்றலை மேற்கொண்டு வருகின்றனர் (Commision, 2015). இவர்கள் கற்று வெளியேறும் வரையிலும் அரசு முழுமையாக இலவச கல்வியை வழங்கி வருகின்றது. இப்பல்கலைக்கழகங்கள் மாணவர்களை உள்வாங்குவதன் நோக்கம் 'உள்நாட்டு உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி முறைமையின் உயர்தரத்தை உறுதிப்படுத்தலும், அனைத்துலக கல்வித் தரத்துக்கு ஏற்ப மாணவர்களை உருவாக்குவதுமாகும்'(UGC, 2016) இதனூடாக தேசிய அபிவிருத்தியில் பங்கெடுப்பவர்களாக மாணவர்களை அரசு மாற்றியமைக்கின்றது. மேலும் இலங்கையின் உயர்கல்வித்துறையில் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்தி அதன் மூலம் தேசிய கல்வி வளத்தை பெருக்குவதும் , உயர்கல்வி நிறுவனங்கள் வழியாக தகுதியுள்ள சிறந்த மனித வளத்தை உருவாக்கி ஆராய்ச்சி மற்றும் ஆளணியை மேம்படுத்துவதும் இதன் பிரதான பணியாகக் காணப்படுகின்றது. (Ashoke kumar.k, 2012)

எனவேதான், பல்கலைக்கழகக் கல்விமுறையானது, சிறந்த தகைமைகளை கொண்டு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வியை வழங்கி, அவர்களைத் தேசிய அபிவிருத்தியில் பங்கெடுப்பவர்களாக மாற்றுவதில் செல்வாக்கு செலுத்துவத்தி வருகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளின் பிரதான இலக்கு 'நவீன கல்விக்கு ஏற்றவாறு மாணவர்களை உருவாக்குவதேயாகும்.' இதற்காகவேண்டி இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக வருடாந்தம் பல மில்லியன் தொகையினை அரசு செலவிட்டு வருகின்றது. 2015ஆம் ஆண்டின் வரவசெலவுத்திட்டத்தில் பல்கலைக்கழக செலவீனங்களுக்காக ரூபா 7950 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றில் ஆய்வுகளுக்கு மட்டும் ரூபா 400 மில்லியனும், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக ரூபா 7550 மில்லியனும் நிதியாக அரசு ஒதுக்கியுள்ளது. (UGC, 2016) இதன் மூலம் ஆய்வு, கண்டு பிடிப்பின் வழியாக சிறந்த வளமாக மாணவர்களை உருவாக்கி தேசிய அபிவிருத்தியில் அவர்களைப் பங்குதாரர்களாக மாற்ற வேண்டும் என பல்கலைக்கழகங்கள் எதிர்பார்க்கின்றது. இருப்பினும் பல்கலைக் கழகங்களில் பல காரணிகள் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் வர்க்க நிலைகள் (Gunawarnana, 1980) குடும்பம், பொருளாதாரம், பிரதேச வேறுபாடுகள்( (Jayaweera, Suwarna, 1991)) என்பன செல்வாக்கு செலுத்தி வருகின்றன. இதனால் இலங்கைப் பல்கலைக் கழகங்'கள் தமது அடைவுகளை இன்னமும் அடைந்து கொள்ளவில்லை என்பதையும் பல ஆய்வு

அறிக்கைகளின் வழியாகவும் கண்டு கொள்ள முடிகின்றது.(Andrea madarasova geckova, 2010)

ஒருபுறம் சிறிய அளவில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும், அடைவுகளிலும் முன்னேற்றம் உள்ள போதும் மறுபுறம் பெருவாரியாக மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் பின்னடைவான போக்கினையும் காணக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு மாணவரிலும் பல இலட்சக்கணக்கான முதலீட்டை அரசு முதலிடும் போது, அதன் விளைவுகள் சரியான முறையில் அமையாது இருக்கமாயின் பல வகையில் அதன் இலக்கினைப் பாதிப்பதாக அமைகின்றது. (Saja, 2016) எனவே இதனை கருத்திற் கொண்டு இவற்றை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதுடன் அதற்குரிய தீர்வினை கண்டறிய வேண்டிய ஓர் தேவைப்பாடு தற்காலத்தில் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வாளர்களுக்கு இருந்து வருகின்றது.

மேலும் பல்கலைக்கழகங்கள் மாணவர்களுக்கு நவீன காலத்துக்கு ஏற்ற கல்வியை வழங்குவதற்காகவேண்டி, கல்வியின் அடைவுசார்ந்த வகையில் மாணவர்களை முன்னேற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொண்டுள்ளது (Harden.RM, 2001), அதன் வழியாகப் பல மாணவர்களின் திறன்மேம்பாட்டுத் திட்டங்கள் பல்கலைக்கழகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக திறன்அபிவிருத்தி தொடர்பாக கணணி அறிவை வழங்கல், ஆங்கில கல்வியை வழங்கல், தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்தல், மென்திறன்களை விருத்தி செய்தல் , விளையாட்டுக்களை அறிமுகப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அவை மாணவர்களின் பல்திறன் விருத்தியில் செல்வாக்குச் செலுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்க விடயம். இக்காரணிகள் மாணவர்களின் ஆற்றல் மேம்பாட்டில் செல்வாக்குச் செலுத்தினாலும், மாணவர்களின் அடைவுமட்டம் தொடர்பான விடயங்களில் ஏனைய சமூக, உளவியல் காரணிகளும் செல்வாக்கு செலுத்தி வருகின்றன. இவை தொடர்பான விடயங்களை ஆராய வேண்டிய தேவை தற்காலத்தில் உணரப்பட்டு வருகின்றது. அண்மைக்காலமாகபல்கலைக்கழக மாணவர்களின் நடத்தையில் முரண்படுகின்ற தன்மையும், போர்க்குணமும் குழுமோதல்கள், இனரீதியான முரண்பாடு என்பன அவர்களின் செயற்பாடுகளில் அதிகரித்து வருவதைக் காணலாம். (Daily news ,2016) எனவே இவற்றை நிவர்த்தி செய்து சிறந்த மாணவர் சமூகத்தை உளவியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாக முன்னேற்ற வேண்டிய தேவைப்பாடு பல்கலைக்கழகங்களுக்கு உள்ளது. மாணவர்களின் அடைவுகளில் உளரீதியான, சமூக ரீதியான தேவைகளும், காரணங்களும் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தி வருகின்றது எனற விடயங்களைக் கண்டறிய வேண்டிய தேவைப்பாட்டு இன்று எழுந்துள்ளது.

சமகாலத்தில் பல்கலைக்கழகங்களில் இலவசமாக கற்றலுக்காக் தொழிநுட்ப உபகரணங்களம்,தொடர்பாடல் இணைப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றது. அதன் வருகையின் பின் இளைஞர்கள் மத்தியில் அவற்றின் பயன்பாடு பெரிதும் தாக்கம் செலுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது. மாணர்களின் நடவடிக்கைகளிலும் அது மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது(Andrea madarasova geckova, 2010) . பல்கலைக்கழக மாணவர்கள் எனும் போது அவர்கள் 20 வயது தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட பின்கட்டிளமைப்பருவத்தில் உள்ளவர்களாகளாவர். எனவே இவர்கள் தொழிநுட்பரீதியான தொடர்பாடல் உபகரணங்களை அதிகமாகப் பயன்படுத்தும் குழுவினராக உள்ளனர். மாணவர்களின் கற்றல் பின்னடைவில் மேற்கூறப்பட்ட காரணிகள் செல்வாக்கு செலுத்தி வருவதை அவதானிக்கலாம;(balan.jo, 1996). இன்று அரசு பல்வேறு வசதிகளைக் கற்றலுக்காக மாணவர்களுக்கு வழங்கியுள்ள நிலையில் அவர்களின் அடைவுகளில் திருப்திகரமான நிலைகள் காணப்படவில்லை எனும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டும் வருகின்றது. எனவே் இந்த ஆய்வு பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் அடைவில் தற்காலத்தில் எக்காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றது? என்பதனைக் கண்டறிவதற்கு இந்த ஆய்வு முனைகிறது.

**நோக்கம்:**

1. **பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் செல்வாக்குச் செலுத்தும் சமூகச் சூழ்நிலைகளை அடையாளம் காணல்.**

2. **மாணவர்கள் கற்றலில் கையாளும் கற்றல் முகாமைத்துவத்தை அடையாளம் காணல்.**

### ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்புசார் மற்றும் எண்ணியல்சார் ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக முதலாம்நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத்தவுகளும் சேகரிக்கப்பட்டன. இவ்வாய்வில் ஆய்வு நுட்பங்களாக பின்வரும் நுட்பங்கள் கையாளப்பட்டன. முதலாம்நிலைத் தவுகளைச் சேகரிப்பதற்காக வினாக்கொத்து ,நேர்காணல், பங்குபற்றிய அவதானம் என்பன பயன்படுத்தப்பட்டன.

இரண்டாம் நிலைத்தவுகளைச் சேகரிப்பதற்காக ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக அறிக்கைகள், பத்திரிகைகள் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாய்வுக்கான மாதிரிகளாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழகத்தில் கல்விகற்கும் மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இப்பல்கலைக் கழகத்தில் காணப்படும் 05 பீடங்களிலிமிருந்து இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழிபீடம் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டது. இப்பீடத்திலிருந்து ஆய்வுக்காக 250 மாணவர்கள் அவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இப்பீடத்தின் மாணவர்களின் விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு 200 பெண் மாணவர்களும் 50 ஆண் மாணவர்களும் ஆய்வுக்குபட்படுத்தப்பட்டனர். இதில் இஸ்லாமிய கற்கைகள் பிரிவில் இருந்து 125 மாணவர்களும், அரபுமொழிக் கற்கைப் பிரிவில் இருந்து 125 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

### இலக்கிய மீளாய்வு

பல்கலைகழகமாணவர்களின் கல்வி பின்னடைவில் 'தனிப்பட்ட, குடும்ப,சமூக ரீதியான காரணிகள் மற்றும் விருப்பம்' என்பன பிரதான காரணியாக அமைவதாக (Marjoribanks, 2002a,Andren , 2010 ஆய்வுகள் முன்வைக்கின்றது. இவ்வாய்வுகளில் மாணவர்களின் தனிப்பட்ட விருப்பு, குடும்பப் பின்னணி போன்றனவும், இனரீதியான வேறுபாடுகளும் ஒருவரின் கற்றல் விருப்பத்திற்கான காரணிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இருப்பினும் இவ்வாய்வு அவுஸ்ரேலியப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் கண்டுபிடிப்புக்கள் முழுமையாக இலங்கைச் சமூகத்தின் பல்கலைக்கழகக் கல்விமுறையிலும், சூழலிலும் செல்வாக்குச் செலுத்துவதாக அமையாது.

துசீதன்.ஐ, குகநேசன். எஸ்,ஆகியோரால் 2014 ல் மேற்கொள்ளப்பட்ட "Influence of facebook in academic performance of Sri Lankan university students" என்ற ஆய்வில் முகநூல்(Facebook) பாவனையானது மாணவர்களின் மத்தியில் பாதிப்பையும், பலவகை பிரச்சினைகளையும் உருவாக்குகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு மாணவர்களின் கற்றல் அடைவிற்கும் முகநூல் பாவனைக்கும் இடையில் அதிகம் தொடர்பு காணப்படுவதனை ஆய்வு விளக்குகின்றது. எனவே மாணவர்களின் கற்றல் நடத்தையில் முகநூல் செல்வாக்கு செலுத்தலாம் என்ற எடுகோளை எடுப்பதற்கு இவ்வாய்வு தூண்டுகிறது.

மாணவர்களின் கற்றல் அடைவில் சமூகப் பொருளாதாரச் சூழ்சிலைகளின் செல்வாக்குப் பற்றிய விடயங்களை Andrea Madarasova Geckova, Peter Tavel ,2013ஆய்வுகள் முன்வைத்துள்ளது. இவ்வாய்வில் பொருளாதாரக் காரணிகளை விட பல்கைக்கழக மாணவர்களின் கல்வி அடைவில் அவரைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளான பேதைப்பாவனை, சகபாடிகள் , நண்பர்கள் போன்றவை செல்வாக்குச் செலுத்துவதாகக் குறிப்பிடுகின்றது.

மூவின கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் இடமாகத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இங்கு பெண் மாணவிகள் 75% மாகவும், ஆண்மாணவர்கள் 25% மாகவுமுள்ளனர் (SEUSL, 2016). பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் கற்றலுக்காகப் பல்வேறு வசதிவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப நவீன முறையில் கற்றல் நடவடிக்கைகள் இடம்பெற்றும் வருகின்றது. இச்சூழ்நிலையில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் எக்காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனை இவ்வாய்வு ஆராய்கின்றது.

கற்றல் என்பது உள்ளார்ந்த செயன்முறையாகும்.(s.k, 2013) கவர்ச்சி, புலக்காட்சி, கவனம், ஆய்வுத்திறன்,பயிற்சி, பழக்கவழக்கம், ,கற்பனை, சூழல்,கற்பித்தல்செயன்முறை, நினைவாற்றல்,மறதி போன்றன ஒருவரின் கற்றலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக அமைகின்றன. இக்காரணிகள் கற்றலின் வெற்றிக்கு ஆதாரமாகவும் அமைகின்றன.(B.K, 2013)

கற்றலில் கவர்ச்சி மாணவர்களின் அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதில் குழுவாகக்கற்றல், சுயவிசாரனைவழிகற்றல் கற்றல், அனுபவத்தின் மூலம் கற்றல் போன்ற கவர்ச்சிகரமான செயன்முறைகள் இதில் உள்ளடங்கும்.(ஜோன் டுயி, 1978) கற்றல் விடயத்தில் ஒருவருக்கு வகுப்பறைச்சூழல் மற்றும் வெளிச்சூழல் என்பனவும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனை மையமாக வைத்தே மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் அமைகின்றன.(Balan.J.O., 1996)

பயிற்சியும் பழக்கமும் கற்றலில் செல்வாக்குப் பெறுகின்றது. மீட்டல் எனும் பயிற்சி கற்றவற்றைப் பயன்படுத்தி அடைவுமட்டத்தை வலுப்படுத்துகின்றது. மீட்டல் தொடர்ச்சியாக அமையாது விடும் போது மறதி கற்றலைப் பாதிக்கும் காரணியாக அமைகின்றது.

ஞாபகம், மறதி எனும் கோட்பாடு, கற்றலில் செல்வாக்குச் செலுத்துகின்றது. ‘ஞாபகம் என்பது எமது நனவில் நிகழ்கின்ற செயற்பாடாகும். இது தகவல்களை சேமித்து அல்லது களஞ்சியப்படுத்தி திரும்ப மீட்டுக்கொள்ளும் தகைமையினை ஞாபகம் எனலாம்’ (s.k, 2013). இவ்வகைஞாபகம் இரண்டு வகைப்படும்

1.குறுங்கால ஞாபகம்( Short Term Memory)

2.நீண்டகால ஞாபகம் (Long Term Memory)

குறுங்கால ஞாபகச் செயன்முறை என்பது, ‘மிக அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் சிறிது காலம் நினைவில் வைத்திருக்கச் செய்கின்றது. இது செய்திகளை குறைந்த காலமே பாதுகாக்கவல்ல நினைவுச் செயன்முறையாகும். மேலும் இது புகுத்தல், களஞ்சியப்படுத்தல் ,தொடர்புகொள்ளல் ஆகிய பகுதிகளைக் கொண்டு செயற்படுகின்றது’ (s.k, 2013)

நீண்டகால ஞாபகம் என்பது நினைவுத் தொகுப்பில் செய்திகளை நீண்டகாலத்திற்குப் பதிவு செய்து வைக்கும் செயன்முறையினைக் கொண்டுள்ளது. கற்ற விடயங்களை நீண்ட காலத்துக்கு களஞ்சியப்படுத்தலையே இது குறிக்கும்.இது பரந்த தகைமையுடையது தொடர்ச்சியாக கற்றவற்றை ஞாபகப்படுத்தும்போது நீண்ட காலத்துக்கு நிரந்தரமாக அவை நினைவிலிருக்கும். புலன்களினால் உள்வாங்கப்படும் விடயங்கள் குறுங்கால நினைவினுள் சேமிக்கப்படும் போதும், நீண்டகால நினைவுக் களஞ்சியத்தில் சேகரிக்கப்படும் வேளையிலும் நினைவிலுள்ள விடயங்கள் இயற்கையாகவே 20 நிமிடத்திற்கு 47% மாக மறந்து போகும் இயல்பு காணப்படுகின்றது அல்லது அழிதலுக்குள்ளாகின்றது.. (Mangal.S.k, 2013) அதேபோல,ஞாகபப்படுத்தலின் போது பல விடயங்கள் குறுக்கிடும் போது அவை கற்றவற்றை மீட்டலில் தடைகளை ஏற்படுத்தி நினைவிலிருந்து அவற்றை அழிக்கின்றது.


இவை தேவையான போது பயிற்சி, ஒத்திகைகள் மூலம் அதாவது வரையறுத்து படித்தல், சத்தம் போட்டு படித்தல், எழுதிப்படித்தல், திரும்ப திரும்ப ஞாபகப்படுத்தல் ஆகிய

செயன்முறைகள் மூலம் மறுபடியும் ஞாபகத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. இவ்வாறு மீண்டும் மீண்டும் ஒத்திகை பார்த்துக் கொள்வதன் மூலமே கற்றவை நினைவில் சேமிக்கப்படுகிறது என உளவியல் கோட்பாடுகள் விளக்கங்களை முன்வைக்கின்றது.

**தரவுப் பகுப்பாய்வு:**

ஆய்வின் போது பெறப்பட்ட தரவுகளில் மாணவர்களின் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை ஆராய்ந்த போது பின்வரும் முடிவுகள் அடையாளப்படுத்தப்பட்டன.


வரைபு 01




மாணவர்களின் கற்றலில் செல்வாக்குச் அசலுத்தும் காரணிகளாக சமூகவலைத்தளப் பாவனை , காதல்விவகாரம், . நண்பர்களின் தொடர்புகள், பொருளாதாரப் பின்னணி குடும்பப் பிரச்சினைகள் என்பன காணப்படுகின்றன


பிரதானமாக வலைத்தளங்களை மாணவர்கள் கற்றலுக்குப் பயன்படுத்துவதனை விட பொழுதுபோக்கிற்கே அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். 230 மாணவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் , சாதாரணமாக ஒரு நாளில், மாணவர்கள் தங்களது விரிவுரைநேரங்கள் தவிர்ந்த நேரத்தில் வழங்கப்பட்ட 08 மணித்தியாலங்களைப் எவ்வாறு எதற்குப் பயன்படுத்துதுகின்றனர் என்பதனை வரைபு 02 காட்டுகின்றது.

வரைபு 02




கற்றவற்றை மாணவர்கள் மீட்டிக் கொள்ள தங்களது நேரங்களைப் பின்வருமாறு செலவிடுகின்றனர்.


வரைபு 03




இங்கு அதிகமான மாணவர்கள் பரீட்சை நேரத்திலேயே கற்றவற்றை மீட்டிக் கொள்கின்றனர்.

கற்றவற்றைத் தெளிவுபடும்துவதற்காக பின்வரும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மாணவர்கள் மேற்கொள்கின்றனர்.இதனை வரைபு 04 காட்டுகின்றது.

**வரைபு 04**




## கண்டுபிடிப்புக்கள்

பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக சமூகவலைத்தளங்களின் பயன்பாடு காணப்படுகின்றது. அதற்கு அடுத்த நிலையில் நண்பர்களின் சிக்கலான தொடர்பாடல்களும், காதல் தொடர்பான நடத்தைகளும் செல்வாக்குச் செலுத்துகின்றது. பொருளாதாரம், குடும்பச் சூழ்நிலைகள் என்பன பாரியளவில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் செல்வாக்குச் செலுத்தவில்லை.

கற்றவற்றை மீட்டிக் கொள்ளல் என்பது கற்றல் நடவடிக்கையில் பிரதான இடம் வகிக்கின்றது. இங்கு அதிகமான மாணவர்கள் தாம் கற்றவற்றை மிக நீண்ட காலத்தின் பின்னரே மீட்டிக் கொள்கின்றனர். இதற்கான காலம் சுமார் மூன்று மாதங்களாகும். மூன்று மாதங்களின் பின்னரான 'மீட்டல் ஞாபகமிருத்தலில் செல்வாக்குச் செலுத்தும்'என்ற உளவியல் விளக்கத்தின் அடிப்படையில் நோக்கும்போது, இங்கு மாணவர்களின் நினைவிருத்தலில் குறைபாடுகள் நிலவுவதனை கண்டுகொள்ள முடிகின்றது. மாணவர்கள் அதிகமாக நாளாந்தம் கற்றலுக்குச் செலவிடும் நேரத்தை விட சமூக வலைத்தளங்களுக்குச் செலவிடும் நேரம் அதிகமாக இருப்பதனால் கற்றவற்றில் அது குறுக்கீட்டை எற்படுவதுவதாக அமையும். இதனால் ஞாகபமிருத்தலில் பாதிப்பு ஏற்படவாய்ப்புண்டு.

மாணவர்கள் கற்றவற்றை மீட்டுக் கொள்வதில் கையாளுகின்ற வழிமுறைகள் சீரான வகையில் அமையவில்லை. அத்துடன் அவர்கள் நேரத்ததை முகாமைத்துவம் செய்யும் முறைகளும் அவர்களின் நினைவிருத்தல், மறதியில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

இவ்வாய்வு வழியாக மாணவர்கள் சிறந்த முறையில் நூல்களைப் பயன்படுத்தும் ஆற்றல் குறைந்துள்ளது. அதற்கு பகரமாக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் விகிதம் அதிகரித்துள்ளமையைக் கண்டு கொள்ள முடிகின்றது. இங்கு மாணவர்கள் பயன்படுத்தும் வலைத்தளங்கள் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த தகவல்களை மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றனரா? என்பது தொடர்பான விடயம் அடுத்து ஆராயப்படவேண்டியுள்ளது.

## முடிவுரையும் விதந்துரையும்

மாணவர்களின் கற்றல் அடைவு நடவடிக்கைகளில் பிரதானமாக அவர்களின் சமூக வலைத்தளப் பாவனை பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. அதிகமான நேரங்களை நாளாந்தம் இப்பாவனைக்காக மாணவர்கள் ஒதுக்கி வருகின்றனர். இதனால்

கற்றலில் ஆர்வம் செலுத்துவது குறைந்துள்ளது. கற்றவற்றை ஞுகபகப்படுத்துவதிலும் மாணவர்கள் தொடர்ச்சியாக ஆர்வம் செலுத்தவில்லை. அதற்காக அவர்கள் கையாளும் நேரமுகாமைத்தவமும் குறைபாடுடையதாகக் காணப்படுகின்றது. இதனால் கற்றவை இலகுவில் மறந்துவிடுவதற்கான வாய்ப்புகள் மாணவர்களில் அதிகம் காணப்படுவதனால் அவர்களின் பெறுபேறுகளில் அவை தாக்கம் செலுத்தும் காரணிகளாக அமைகின்றது.

எனவே இத்தகைய சூழ்நிலைகளை மாற்றியமைத்து மாணவர்களைக் கற்றல் அடைவில் கவனஞ்செலுத்தத் துாண்டுகின்ற வகையில் பாடத்திட்டங்களையும், வகுப்பறைகளையும் வடிவமைக்கவேண்டும். மாணவர்களின் தொழிநுட்பசாதனப் பாவனையை கற்றலில் கவர்ச்சியாகப் புகுத்தி மாணவர்களை கற்றலில் ஈடுபடுத்தும் வகையிலான நுட்பங்களையும் பீடங்கள் உருவாக்க வேண்டும். இத்தேவைப்பாட்டைப் பல்கலைக்கழகங்கள் இன்று எதிர்கொண்டுள்ளது.

## Bibliography


Andrea madarasova geckova, p. t. (2010). Influence of facebook in academic performance of srilankan university students. *kevin marjoribanks* , 233-242.

Ashoke kumar.k, f. (2012, 11 22). *thinakaran*. Retrieved 11 16, 2016, from palkalaikazakankalukku puthiya maanavarkalai serkum nadavadikkai march 15 il aarambam: http://archives.thinakaran.lk/2012/11/22/?fn=m=1211221

B.K, M. (2013). *Psychology The Study Of Human Behaviour.* Delhi: PHI learning private limited.

balan.jo, B. (1996). *kalvi ulaviyal adipadaihal.* madras: Dhwani 25 trust cross street.

Commision, U. G. (2015). *Students Enrolment.* colombo: UGC.

Gunawarnana, G. (1980). *Higher education in Srilanka: Socio,Economic performance.* Melborn: La Drof University.

Harden.RM. (2001). The learning environment and the curriculum. *Journal of Education* , 333-336.

Jayaweera, Suwarna. (1991). University and oppertunity: Social Class. *Education* (pp. 6-14). Colombo: olombo University.

s.k, M. (2013). *Essentials of Education Psychology.* Delhi: PHI Learning private limited.

Saja, A. (2016). *www.kalmunaizahira.lk*. Retrieved 11 16, 2016, from palkalaikazaha anumathium maatrup pattap padippu vali muraihalum: http://kalmunaizahira.lk/news/articles/104-html.

SEUSL. (2016). *Student Report.*

sharifudeen, R. (2016, 10 19). *uyar tharathil sirantha peruperuhal aangalukka pengelukka ilangayil uyar kalvi*. Retrieved 11 16, 2016, from www.Roartamil.com: http:/roartamil.com/features/university-education/

UGC. (2016). *universtiy students.* colombo: UGC.